**வளர்ச்சிப் பாதையில் யாழ்.மாவட்ட இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம்**

தேசத்தின் வங்கியாளராகிய இலங்கை வங்கி தனது 72 வது அகவையில் தடம் பதித்துள்ள வேளையில் அதன் வளர்ச்சிப் பாதைக்கு அணிகலன்களாய் வித்திட்டவர்கள் மூத்த வங்கியாளர்களான ஓய்வூதியர்களே. அந்த வகையில் யாழ்.மாவட்ட ஓய்வூதியர்கள் தங்கள் சங்கத்தின் அலுவல்களை திறம்பட முன்னெடுப்பதற்காக வங்கி ஆரம்பிக்கப்பட்ட தினமாகிய கடந்த ஆகஸ்ட் முதலாம் திகதி யாழ்.அதி மேற்தரக் கிளையின் முதலாம் மாடியில் அலுவலகம் ஒன்றை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்துள்ளார்கள்.

ஓய்வு பெற்ற வட பிராந்தய உதவிப் பொது முகாமையாளர்ரும் இச்சங்கத்தின் தலைவருமாகிய திரு.ந.சிவரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் யாழ். அதி மேற்தரக் கிளையின் முகாமையாளர் திரு.A. மகாதேவா அவர்கள் அலுவலகப் பெயர் பலகையை திரை நீக்கம் செய்து வைக்க இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் உயர் திரு.K.E.D. சுமணசிறி அவர்களுடன் திரு.சிவரத்தினம் அவர்களும் இணைந்து நாடா வெட்டி வைபவ ரீதியாக அலுவலகத்தை திறந்து வைத்தனர்.

மேற்படி நிகழ்வில் தலைவர் திரு.சிவரத்தினம் தமது தலைமையுரையில் ஓய்வூதியர்கள் மதிக்கப்பட வேண்டும் அவர்களின் கௌரவம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் கருத்தாழமிக்கவராகத் திகழ்ந்த முன்னாள் யாழ். மாவட்ட முகாமையாளரான திரு.K. கணேசமூர்த்தி அவர்களால் ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வட மாகாண அனைத்து வங்கி ஓய்வூதியர்கள் சங்கமானது தனது பரிமாண வளர்ச்சியின் ஓர் அங்கமாக ***இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம்*** வட மாகாணத்திற்கென ஒரு அலுவலகத்தை இன்று திறந்து வைப்பதில் பெருமிதம் கொள்கிறது என்றார்..

அவர் தொடர்ந்து தமது உரையில் கணினி வலைப் பின்னலுக்குள் சகல வங்கிக் கிளைகளும் தமது சேவையை இன்று திறம்பட ஆற்றகின்றன என்றால் அதன் வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை அதுவும் கடந்த மூன்று தசாப்த காலமாக யாழ்.குடாநாட்டில் நடந்த யுத்த சூழ்நிலையில் மூத்த வங்கியாளரான எம்மவர்கள் பட்ட சோதனைகளும் அர்பணிப்புள்ள சேவைகளும் மறப்பதற்கில்லை. அவர்களின் குறை நிறைகளை இச் சங்கம் சிரமேற்கொண்டு பணியாற்றி அவர் தம் தேவைகளை நிறைவேற்றும். மேலும் சமகால வங்கியாளர்களுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்தி அதன் மூலம் வங்கியின் முன்னேற்றத்திற்கு உழைத்தலை நாம் எமது கடமைகளில் ஒன்றாகக் கொணடுள்ளோம். தற்போதைய மற்றும் எதிர்கால ஓய்வூதியர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் முகாமைத்துவத்திற்கும் ஓய்வூதியர்களுக்கும் இடையே ஏற்படும் பிரச்சனைகளுக்கு எமது சங்கம் ஒரு உறவுப் பாலமாக சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்க முடியும் என்றும் எடுத்துரைத்தார். அந்த வகையில் முக்கியமான இரண்டு விடயங்களை குறிப்பிட்டிருந்தார்.

கடந்த யுத்த காலத்தில் கடமையாற்றிய எம்மவர்கள் நாட்டின் தலைநகருடன் சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலையிலும், வங்கியில் காகிதாதிகள் மற்றும் திரவப் பணம் அற்ற சூழ்நிலையிலும் ஏனைய திணைக்களங்கள் செயற்பட முடியர்த நிலையிலும் ஊழியர்களும் கிளைகளும் இடம் பெயர்ந்த சுழலிலும் ஊழியர்கள் படுகாயம்

அடைந்தும் இறந்தும் சோகங்கள் ஏற்பட்டிருந்த தருணத்திலும் கண்ணியமான வாடிக்கையாளரிடமிருந்து பணத்தைப் பெற்றும் காசுக் கட்டளைகளை வினியோகித்தும் புதியதொரு வங்கி நடைமுறையை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக வங்கிச் சேவையை நடாத்தி பாராட்டுகளைப் பெற்றனர். இவையாவும் கடிதங்கள் மூலமும் பத்திரிகை அறிக்கைகள் மூலமுமாகவே இருந்தன.

எனவே காலம் கடந்த போதும் அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு அவர்கள் பெறும் ஓய்வூதியங்களிற்கான அடிப்படைச் சம்பளத்தை அவர்கள் ஓய்வு பெற்ற போது வகித்த பதவி நிலையிலும் பார்க்க ஒரு பதவி உயர்வுடன் கூடியதான அடிப்படைச் சம்பளமாக கணிக்க வேண்டும். மேலும் வீட்டுக்கடன் பெற்றுக் கட்டப்பட்ட வீடுகள் பல குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியும் இராணுவத்தினரது உயர் பாதுகாப்பு வலயத்துள் அகப்பட்டும் இருந்த போதும் தற்போதைய ஓய்வூதியர்களுக்கு அந்த கடன்களை வட்டியுடன் செலுத்துவதில் எந்த கருணையும் முகாமைத்துவத்தினால் காட்டப்படவில்லை. மேலும் அவர்களது கடன்கள் ஓய்வூதியம் பெற்ற காலத்தில் முழுமையாக அறவிடப்பட்டன ஆனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதி ஊழியர்களுக்கு இவ்விடயத்தில் சலுகைகள் வழங்கப்பட்டதாக அறிகின்றோம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு முகாமைத்துவத்தினால் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இக் கோரிக்கைகள் இரண்டும் சகல வங்கி முகாமைத்துவ மட்டங்களுக்கும் ஏற்கனவே தமது சங்கத்தால் அனுப்பப்பட்டதாக குறிப்பிட்டார்.

தமதுரையின் இறுதிக்கட்டத்தில் ஒவ்வொரு திணைக்கள ஓய்வூதியர்களும் இவ்வாறான சங்கங்களை அமைத்து தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக குரல்கொடுக்க வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

இறுதியாக அலுவலகம் திறப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் அவர்களுக்கும் அதி மேற்தரக் கிளை முகாமையாளருக்கும் வங்கி தலைமைப் பீடத்திற்கும் வங்கி ஓய்வூதியர் தாய் சங்கத்திற்கும் இலைமறை காயாக இருந்து பல உதவிகளைப் புரிந்த சமகால ஊழியர்களுக்கும் மற்றும் ஓய்வூதியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

நிர்வாக சபை உறுப்பினர்

இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம்

யாழ்.மாவட்டம்